**தலைப்பு 238 - அரசிறைக் கொள்கைத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 238 - அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 05 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 78.38 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 72.66 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட

மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 5.72 மில்லியன் அதாவது 7.30 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதிஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 75.88 | 70.43 | 5.45 | 7.18 |
| மூலதனம் | 2.50 | 2.23 | 0.27 | 10.80 |
| மொத்தம் | 78.38 | 72.66 | 5.72 | **7.30** |

## 2.2 வருமானக் கணக்குகள்

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 12,005 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ஒரு வருமானக் குறியீட்டிலிருந்து மாத்திரம் ரூபா 21.36 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது அவ்வருமானக் குறியீட்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 327.20 சதவீதமாக இருந்தது. அடுத்த வருமானக் குறியீட்டிலிருந்து எந்தவொரு வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வருமானக் குறியீடு** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **மிகை/ (பற்றாக்குறை) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மிகை/ (பற்றாக்குறை)** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 10.02.10.00 | 5.00 | 21.36 | 16.36 | 327.20 |
| 20.05.01.00 | 12,000.00 | - | (12,000.00) | (100.00) |
| மொத்தம் | 12,005.00 | 21.36 | (11,983.64) | **(99.82)** |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.72 | 0.99 | 1.00 | 1.70 | 10.00 | 6.56 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவர், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10.02.10.00 ஆம் வருமானக் குறியீடு - சமூகப் பொறுப்பு வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 247/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான வருமானக் கணக்கு 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு மாதகால தாமதத்தின் பின்னர் 2016 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 5.00 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 21.36 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 327.20 சதவீதமாகும்.

(iii) வருமானக் குறியீட்டிற்குரிய இலங்கை சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களங்களினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 82,893,328 நிலுவை வருமான அறிக்கை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வருமானக் குறியீட்டின் நிலுவை வருமானம் ரூபா 82,893,328 ஆக இருந்தது. இருந்த போதிலும் வருமானக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலுவை வருமானம் ரூபா 61,537,332 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 21,355,996 நிலுவை வருமானக் கணக்கில் குறைத்து பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திணைக்களத்தால் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 20.05.01.00 ஆம் வருமானக் குறியீடு - மத்திய வங்கி இலாபம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டின் மத்திய வங்கி இலாபமாக சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 11,500 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டிற்காக ரூபா 23,000 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அந்த வருமானம் ரூபா 12,000 மில்லியன் வரை வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் எந்தவருமானமும் சேகரிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது இலங்கை மத்திய வங்கி பங்கிலாபத்தை பிரேரிக்காமையினால் வருமானக் கணக்கிற்குரிய வருமானம் காணப்படவில்லை.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 23801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2002 மே மாதத்தின் போது மாகாண சபைக்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற பெண் உத்தியோகத்தரின் ரூபா 85,378 தொகையான கடன் மீதி 2015 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய மாகாண சபையிலிருந்து பணமாக ஒரே தடவையில் அறவிடவேண்டியிருந்தது. அக்கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்ததது.

## 3.3 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | | |
| (i) 2010 ஒக்தோபர் 10 ஆந் திகதிய நிதி.அ.01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 382,162 ஐக்கிய அமெரிக்க டொலர் 1,600 | வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு உரித்தான அமையப்படிகள் அந்த அரசாங்கத்தால் அல்லது வழங்கிய நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது திணைக்களத்தால் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு 05 சந்தர்ப்பங்களின் போது ஐக்கிய அமெரிக்க டொலர் 1600 மற்றும் ரூபா 382,162 தொகை என்பன செலுத்தப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | - மேற்படி - | ரூபா 126,000 ஐ.அ.டொலர் 3,200 | உத்தியோகத்தரொருவருக்கு பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியில் பட்டப்பின்படிப்பு பாடநெறியொன்றைப் பின்பற்றுவதற்காக 2015 சனவரி 04 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 24 ஆந் திகதி வரை கற்கை விடுமுறைபெற்று வெளிநாடு சென்றமைக்காக விமானப் பயணச்சீட்டுக் கட்டணமாக ரூபா 126,000 தொகையும், 10 நாட்களுக்கான அமைய மற்றும் இணந்த படிகளாக ஐ.அ.டொலர் 3200 (400+2800) தொகையும் திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்காகப் பெறப்பட்ட அங்கீகாரமொன்று கோவையில் காணப்படவில்லை. |

(ஆ) பாதீட்டுச் சுற்றறிக்கை

--------------------------------------

| | | |
|---|---|---|
| 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 7.4 மில்லியன் | நிதிக்குத்தகை முறையின் கீழ் பணிப்பாளர் நாயகத்திற்கு கொள்வனவு செய்யக்கூடிய உற்பத்தி வரி மற்றும் சுங்கவரியற்ற வாகனமொன்றின் ஆகக்கூடிய சந்தை விலை ரூபா 4 மில்லியனாக இருந்த போதிலும் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட வாகனத்தின் பெறுமதி ரூபா 7.4 மில்லியனாக இருந்தது. |

## 3.4 செயலாற்றல்

-----------------------------

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்காக கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்ட வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடு, வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறு அனுப்பப்பட்ட வருமான மதிப்பீடுகளில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 128,138 மில்லியனாக இருந்தது. அவ்வாறு அனுப்பப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் திணைக்களத்தால் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது ரூபா 63,033 மில்லியனால் அதிகரித்து ரூபா 191,138 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான குறியீடு | வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் மதிப்பீடு | இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 20.02.02.01 | 6,221 | 6,725 | 500 |
| 20.02.01.99 | 60 | 300 | 240 |
| 20.02.01.01 | 650 | 700 | 50 |
| 10.02.11.00 | 29,000 | 40,000 | 11,000 |
| 20.02.02.99 | 1,300 | 1,500 | 200 |
| 20.03.02.99 | 7,000 | 8,990 | 1,990 |
| 20.03.99.00 | 4,000 | 15,000 | 11,000 |
| 20.06.04.00 | 14,077 | 14,300 | 223 |
| 30.01.01.00 | 16,000 | 30,000 | 14,000 |
| 20.02.03.00 | 30,680 | 45,500 | 14,820 |
| 20.02.04.00 | 5,050 | 5,160 | 110 |
| 20.04.01.00 | 9,100 | 15,000 | 5,900 |
| 20.04.02.00 | 5,000 | 8,000 | 3,000 |
| மொத்தம் | 128,138 | 191,175 | 63,033 |

(ஆ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறைக் கொள்கைச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானத்தை சரியாக எதிர்வுகூறல் மிகவும் முக்கியமானதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே அரச வருமானம் மற்றும் பெறுவனவுகளை உள்ளடக்கிய நிதி மூலங்கள் மற்றும் அரச நிதி செயற்படு நிலையை முகாமைத்துவம் செய்தல் என்பன பிரதான பணியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தால் அரசின் ஒட்டுமொத்த வருமானம் எதிர்வுகூறப்படும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 10 சதவீதம் முதல் 1968 சதவீதம் வரையிலான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 10 சதவீதம் முதல் 120 சதவீதம் வரையிலான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டன.

(iii) பிரதேச சபைகளுக்காக ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான வருமான விபர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தால் சுனாமி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் பெறுமதிசேர் வரியைத் தீர்ப்பதற்காக 2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 238-1-1-0-1405 செலவின விடயத்தின் கீழ் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. உரிய செலவினங்களைச் செய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 32,171,486 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், உரிய கோவைகள் ஆவணக் காப்பகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு ஒரு கோவை மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2005 நவம்பர் 16 ஆந் தகிதிய FP/06/20/13/136 ஆம் இலக்க அக் கோவையில் குறிப்பிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சுனாமி செயற்திட்டத்திற்காக ரூபா 26,435,521 தொகையான வரியை விடுவிப்பதற்கு பிற்போடப்பட்ட கடிதம் தவிர ஏனைய செயலாற்றல்களுக்குரிய தகவல்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தெரிவின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்குரிய விலைப்பட்டியல் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 214,476,573 கிரயமான 07 செயற்திட்டங்களுக்காக 15 சதவீத பெறுமதிசேர் வரியாக ரூபா 32,171,486 தொகை 2015 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடம் முழுவதும் அமுல்படுத்தப்படுகின்ற தரவு முறைமையொன்றைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் இந்நாட்டிற்கு கொண்டுவரப்படுகின்ற பொருட்களுக்காக சொத்தின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற பெறுமதிசேர் வரியை (VAT) விடுவித்தல் தொடர்பான தரவு முறைமையொன்று திணைக்களத்தால் பேணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான பிரச்சினைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அமைச்சின் ஆண்டறிக்கையை அச்சிடுவதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கையின் ஒரு பிரதியை அச்சிடுவதற்கு முறையே ரூபா 3,864 மற்றும் ரூபா 3,183 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டின் நிதி அமைச்சின் ஆண்டறிக்கையை பிரசுரித்தல் நிதி அமைச்சினால்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக ஒரு அறிக்கையை அச்சிடுவதற்கு ரூபா 1,480 வீதம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி அமைச்சின் ஆண்டறிக்கை முறையே 2,750 மற்றும் 1,800 பிரதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்தன. இந்த ஆண்டறிக்கை திணைக்களத்தின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்குரியதாக எஞ்சியிருந்த அறிக்கைகள் Speed post Courie ஊடாக ரூபா 1,320,000 செலவில் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே 2014 ஆம் ஆண்டிற்குரிய எஞ்சிய 1800 அறிக்கைகள் Speed Post சேவை மூலம் பல்கலைக்கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 405,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையை அச்சிடுதல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அறிக்கையொன்றை அச்சிடுவதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 8,449 மற்றும் 7,967 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. இருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் அறிக்கையை அச்சிடுவதற்காக ஒரு அலகிற்கு ரூபா 495 கிரயம் வரை குறைவடைந்திருந்தது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இந்த அறிக்கையை அச்சிடுவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2016 இன் போது அது அரச அச்சகத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டமையினால் கிரயம் குறைவடைந்திருந்தது.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 376 அறிக்கைகள் வீதம் எஞ்சியிருந்தன.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அரசிறை முகாமைத்துவ அறிக்கையைப் போன்றே ஆண்டறிக்கையையும் அச்சிடுவதற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிவிற்காகவும் பெறுகைகள் குழுவிற்காகவும் அந்த உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நடு ஆண்டின் அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 719 அறிக்கைகள் மற்றும் 1714 அறிக்கைகள் எஞ்சியிருந்ததுடன் ஆரம்ப தேர்தல் நிதி நிலைமை அறிக்கை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே 487 அறிக்கைகள் மற்றும் 1367 அறிக்கைகள் எஞ்சியிருந்தன.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 13 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 25 | 18 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 10 | 05 |
| | மொத்தம் | 65 | 43 | 22 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளபடியான பதவியணியினரில் சிரேஷ்ட நிலையில் 13 உத்தியோகத்தர்களும், 20 சந்தர்ப்பங்களின் போது உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றியிருந்ததுடன் ஒரு உதவிப் பணிப்பாளர் தனிப்பட்ட பணிக்காக 2015 ஆம் ஆண்டின் போது வெளிநாடு சென்றிருந்தார்.